IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.
DEPOSITION OF WITNESS
(As per XXIII case of Criminal procedure)
SESSIONS CASE NO. 48/2021

Deposition of witness for prosecution : PW 1
Defense :

Name : சுந்தர்

Father's Name : ரவி

Village :

Taluk : ஆரணிபாளையம்

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.11.2022

முதல் விசாரணை

1. நான் நெ.98/7 புதுகாமூர் தெரு, ஆரணியில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுனராக பணி புரிந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் ஓட்டுனராக பணி புரிந்து வந்தேன்.

2 . இந்த வழக்கு பற்றி எனக்கு என்ன தெரியும் என்றால், 26.09.2020 அன்று ஆரணி நகர காவல் நிலையத்திற்கு என்னை வரச்சொன்னார்கள். நான் அங்கு சென்றவுடன் எழுதி வைக்கப்பட்டிருந்த ஒரு பேப்பரில் என்னிடம் ஒரு கையெழுத்து பெற்றுக்கொண்டார்கள். நான் கையெழுத்து போட்ட அந்த பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். புகாரில் உள்ள என் கையெழுத்து **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. ஆஜர் எதிரிகள் இருவரையும் எனக்குத் தெரியாது. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட ரூ.1,650/-யும் நான் குற்றவியல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து திரும்ப பெற்றுக் கொண்டேன். அந்த பணம் ரூ.1,650/-ஐ இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டுமென்று எனக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த பணத்தை நான் மெமோ மூலமாக நீதிமன்றத்தில் திரும்ப செலுத்த தயாராக உள்ளேன். அவ்வாறு பணம் ரூ.1,650/- ஐ நான் எதற்காக குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து திரும்ப பெற்றேன்என்றும் எதற்காக அந்த பணத்தை இன்று இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் சி.எம்.பி.நெ.876/2020 என்ற மனுவில் உள்ள கையெழுத்து என்கையெழுத்து தான். ஆனால் எந்த வழக்கிற்காக சாட்சியம் அ ளிக்க இன்று நீதிமன்றம் வந்துள்ளேன் என்று எனக்குத் தெரியாது.

4. **அரசுதரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அதனை தொடர்ந்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.**

5. நான் போலிஸ் விசாரணையின் போது 26.09.2020 அன்று காலை 8.00 மணி அளவில் ஆரணி டவுன் காமராஜர் சிலை அருகில் தள்ளுவண்டியில் வாழைப்பழம் வியாபாரம் செய்து வந்தேன் என்றால் சரியல்ல.

6. அன்றைய தினம் அந்த நேரத்தில் எதிரிகள் இருவரும் டி.என்.73எஎ9357 என்ற இருசக்கர வாகனத்தில் வந்து என்னிடம் ரூ.1000/- கேட்டு தகராறு செய்தார்கள்என்றால் சரியல்ல.

7. அவ்வாறு நான் ரூ.1000/- கொடுக்க மறுத்ததால் 1ம் எதிரி தன்கையில் வைத்திருந்த பட்டா கத்தியை காட்டி என்னை மிரட்டினார் என்றால் சரியல்ல. அப்போது எதிரிகள் இருவரும் என்னுடைய சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.1,650/-ஐ என்னிடமிருந்து கொள்ளை அடித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. அப்போது 1ம் எதிரி ராமு தன் கையில் வைத்திருந்த பட்டா கத்தியை எடுத்து என் வலது கையில் கிழித்து காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

8. அந்த சமயம் 2ம் எதிரி என்னை பார்த்து எங்களை யார் என்று தெரியாதா என்று அசிங்கமாக திட்டியும் அவரது வலது கையால் என் இடது பக்க கன்னத்தில் அடித்தார் என்றால் சரியல்ல. அப்போது 2ம் எதிரி எனது இடதுகையில் கட்டியிருந்த கைகடிகாரத்தை கழட்டி கொடு என்று சொல்லி பறித்துக்கொண்டார் என்றால் சரியல்ல.

9. அப்போது என் கூச்சல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் ஓடி வந்தவுடன் 1ம் எதிரி பட்டா கத்தியால் என்னை வெட்ட வந்தார் என்றும் நான் ஒதுங்கி கொண்டதால் பட்டா கத்தி என் தள்ளுவண்டியின் மீது பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு நான் ஒதுங்கி போகவில்லை என்றால் அந்த பட்டா கத்தி என் தலையில்பட்டு என் உயிர்போயிருக்கும் என்றால் சரியல்ல.

10, அப்போது 1ம் எதிரி பட்டா கத்தியை வைத்து இருசக்கரவாகனத்தில் தீப்பொறி கிளம்பும் அளவிற்கு வேகமாக உரசினார் என்றும், 2ம் எதிரி தனது இருசக்கர வாகனத்தில் வைத்திருந்த சோடா பாட்டில்களை எடுத்து ரோட்டில் போட்டு உடைத்து பொது மக்களை பயமுறுத்தினார் என்றால் சரியல்ல.

11. நான் பயந்து சம்பவம் பற்றி ஆரணி நகர காவல் நிலையம் சென்று என்னிடம் ரூ.1,650/- மற்றும் கை கடிகாரத்தை பறித்துக்கொண்டு கொலை மிரட்டல் விடுத்ததாக 26.09.2020 அன்று ஆரணி நகர காவல் நியைலத்தில் கொடுத்த புகார் தான் நான் கையெழுத்து செய்தததாக சொல்லும் அ.சா.ஆ1 ஆவணம் என்றால் சரியல்ல.

12. நான் புகார் கொடுத்தபிறகு போலிஸ் நமூனா மூலமாக என்னை ஆரணி அரசமருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான்.

13, தற்போது நடந்த உண்மை சம்பவங்கள் அனைத்தையும் மறைத்து எதிரிகளை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

## எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் ஆரணிபாளையத்தில் டீக்கடை வைத்துள்ளேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கேட்டது போன்று பழக்கடை எதுவும் வைத்திருக்கவில்லை என்றால் சரிதான் . நான் டீக்கடை வைத்துள்ளதால் ஆரணி நகர காவல் நிலைய போலிசார் என் கடைக்கு டீ அருந்த வருவதன் மூலம் அவர்கள் எனக்கு பரிச்சையமானார்கள் என்றால் சரிதான். அவ்வாறு ஆரணி நகர காவல் நிலையபோலிசார் என் கடைக்கு வந்தசமயத்தில் என்னிடம் ஒரு

கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். அந்தசமயத்தில் நான் 4,5 எழுதிய எழுதப்படாத பேப்பர்களில் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான் அந்த கையெழுத்துக்களை நான் எதற்காக போட்டேன் என்று எனக்குத் தெரியாது. போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் அந்த கையெழுத்துக்களை போட்டேன்.

2. ரூ.1,650/- பணத்தை போலிசார் என்னிடம் கொடுத்து அந்த பணத்தை எப்போது கேட்டாலும் திரும்ப ஒப்படைக்க வேண்டுமென்று சொல்லி என்னிடம் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

3. போலிசார் என்னிடம் சி.எம்.பி.நெ.876/2020 என்ற மனு தாக்கல் செய்ய போவதாகவும் அ தில் நான் கையெழுத்து செய்ய வேண்டுமென்று என்னிடம் சொன்னார்கள் என்றால் சரிதான். அந்த மனு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்று எதற்காக என்னிடம் கையெழுத்து பெற்றார்கள் என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான்.

4, பட்டா கத்தி என்றால் சுமார் 2 அல்லது 3 அடி நீளம் இருக்கும் என்றால் சரிதான். என்னை பட்டா கத்தியால் யாரும் வெட்டவில்லை என்றும் அதற்காக நான் சிகிச்சைக்காக எந்த மருத்துவமனைக்கும் செல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மருத்துவமனைக்கு போலிசார் என்னை எதற்காக அழைத்து சென்றார்கள் என்று எனக்குத் தெரியாது. போலிசார் அழைத்ததன் பேரில் நான் போலிசாருடன் சென்றேன்.

5. இந்த வழக்கில் பட்டியல் சாட்சிகளான சுரேஷ், ராஜேஷ், சிவக்குமார், ஹரிதாஸ், விக்ரம், பிரகாஷ்ராஜ் ஆகியோர்கள் என்னுடைய நண்பர்கள் என்றும் ஆரணிபாளையத்தை சே ர்ந்தவர்கள்என்று சொன்னால் சரிதான்.

6. வழக்கில் சொல்லியுள்ளவாறு எந்த ஒருசம்பவமும் நடக்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் புகாரில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு அதற்கேற்றாற் போல் எதிரிகள் மீது பொய்யான வழக்குபதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.